**உச்ச நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவ சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உச்ச நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவ சபையின்2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான செலவுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள்,பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து பல்கலைகழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது். எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால்

செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பொதுத்துறை தொடர்ந்நியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாக தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும்,தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களாக கணக்களிப்பொறுப்பினை பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதியப்பட்ட சொத்துக்களுக்கான நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் இருக்குமாகவிருந்தால் அவை சம்பந்தமாக முறையாக நடவடிக்கை உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்வதற்கு ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தினால் பேணுதல் அவசியமானதாகும்.

#### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் நிதி நிலைமைக் கூற்றினைத் தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இல் குறிப்பிட்ட நிதி நிலைமை கூற்று படிவம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் (SLPSAS)இலக்கம் 01 இல் குறிப்பிட்ட படிவத்திற்கு இணங்க 2023 ஆம் ஆண்டிலிருந்து நிதி நிலைமை கூற்று தயாரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்தின் எச்சப் பெறுமதி மற்றும் பயன்பாட்டு ஆயுட் காலத்தை கழித்து ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதித் திகதியின் போது மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமானத்தேய்வு செய்து முடிவுறுத்தப்பட்ட எனினும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்ற ரூபா 6,603,245 பெறுமதியான மின்சார படிக்கட்டு மற்றும் ரூபா 851,711 பெறுமதியான அம்புலன்ஸ் வாகனம் மீளாய்வு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இற்கு இணங்க 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து முடிவுறுத்தப்பட்ட ரூபா 6,603,245 பெறுமதியான 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட மின்சாரப் படிக்கட்டினை மேம்படுத்தலானது நிலையான சொத்துக்களை மீள்மதிப்புச் செய்யும் குழுவிற்கு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க மதிப்பீட்டுத் தவறினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய சொத்துக்கள் வகுப்பினை மீள்மதிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் மோட்டார் வாகனத்தினுள் உள்ளடக்கப்பட்ட மேற்கூறிய அம்புலன்ஸ் வாகனம் மீள்மதிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் 25 ஆம் பந்தி மற்றும் 55 ஆம் பந்திக்கு முரணாக மோட்டார் வாகன மீள்மதிப்பு மிகையாகிய ரூபா 12,500,000 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியால் முதலீட்டுச் செயற்பாடுகள் குறைவடைந்திருந்ததுடன் மீள்மதிப்பு மிகைக்குச் சமனான அளவு செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் ஆண்டிற்கான பற்றாக்குறைக்கு செம்மையாக்கியதன் காரணமாக அப்பெறுமதியால் செயற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப்பாய்ச்சல் அதிகரித்திருந்தது.

ஒப்படைக்கப்பட்டது. அச்சொத்துக்களின் மீள்மதிப்பு பெறுமதி 2023 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் 1990 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 851,711 பெறுமதியான 30-0592 ஆம் இலக்க அம்புலன்ஸ் வாகனத்தை மதிப்பீடு செய்து தருமாறு 2021 யூலை 19 மற்றும் 2021 செப்தெம்பர் 17 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் மதிப்பீட்டுத் திணைகக்களத்திற்கு வேண்டுதல்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அது தொடர்பாக மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2022 திசெம்பர் 29 ஆந் திகதி வேண்டிக்கொள்ளப்பட்ட தகவல்கள் 2022 சனவரி 27 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டது. எனினும் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் நிறைவேற்றியிருக்காதத னால் உரிய அம்புலன்ஸ் வாகனத்தினை மதிப்பீடு செய்து தருமாறான வேண்டுகோள் மீண்டும் 2023 மார்ச் 15 ஆந் திகதியஅத்திணைக்களத் திற்கு அனுப்பியதன் பின்னர் இன்றுவரை அந்த மதிப்பீட்டு நடவடிக்கை இடம்பெற்று வருவதனால் 2023 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில்

| | | | |
|---|---|---|---|
| | | செம்மையாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் 25 மற்றும் 55 ஆம் பந்திகளுக்கு முரணாக மீளாய்வாண்டில் ரூபா 119,200,000 தொகையான மோட்டார் வாகனம் மற்றும் கட்டிட மீதி மீள்மதிப்பு ஒதுக்கமாக முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக இனங்காணப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியால் முதலீட்டு நடவடிக்கைகள் குறைவடைந்திருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் பிரகாரம் பணமற்ற கொடுக்கல் வாங்கல்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் இனங்காணப்படாமைக்கும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் இனங்காணப்பட்டுள்ள குறைபாடுகளை முறையாக செம்மையாக்குவதற்கும் 2023 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எதிர்காலத்தில் காசுப்பாய்ச்சல் கூற்றினை நேரடி படிவத்திற்கு இணங்க சமர்ப்பிப்பதன் மூலம் மேற்கூறிய குறைபாட்டினை தவிர்த்துக் கொள்வதற்கு கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 11 இன் 44 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற மானியங்கள் சொத்துக்கள் மற்றும் வருமானமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் ரூபா 13,600,000 தொகையான மூலதன மானியப் பெறுவனவுகள் இந்த கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது பொதுத்திறைசேரியிடமிருந்து உச்ச நீதிமன்ற கட்டிடத்தொகுதிக்கு கிடைத்த ரூபா 13,600,000 மூலதனப் பெறுவனவுகள் அரசாங்கத்தின் மூலதனப் பெறுவனவுகளாக (Goverment Capital) இனங்கண்டு உரிமை மூலதனத்தின் (Equity) கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எனவும் அடுத்துவரும் காலங்களில் SLPSAS 11 இன் 44 ஆம் பந்திக்கு இணங்க மூலதனப் பெறுவனவுகளை கணக்குகளில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது இடம்பெற்ற பிழைகளை கடந்த காலத்திற்குப் பொருத்தமாக செம்மையாக்கியதன் பின்னர் மீளாய்வாண்டுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான தகவல்களை சரிசெய்ய வேண்டிய போதிலும் சபையினால் அவ்வாறு மேற்கொள்ளப்படாது ரூபா 522,420 தொகையான முன்னை ஆண்டின் பிழையை மீளாய்வாண்டிற்கான உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் திரண்ட வருமானம் மற்றும் செலவுக் கணக்கிற்கு செம்மையாக்கப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக நியம இலக்கம் 03 இன் 54 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிப்படுத்துதல்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை. மேலும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகள் தொடர்பான ரூபா 204,990 தொகையான மதிப்பீட்டு வித்தியாசம் மற்றும் பிடித்துவைத்தல் பணத்தை பதிவழித்தல் முன்னைய ஆண்டின் பிழையாக இனங்காணப்பட்டு மீளாய்வாண்டிற்கான உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் செம்மையாக்கப்பட்டிருந்தது. | அட்டுறு அடிப்படையில் கணக்குகளைத் தயாரிக்கும் போது ஆண்டிற்குரிய வருமானங்களும் செலவுகளும் மற்றும் பெறுவனவும் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படாது ஆண்டிற்குரிதான வகையில் மதிப்பீட்டுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சுட்டிக் காட்டப்படுகின்றது. (உதாரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் மாத்திற்குரிய மின்சாரப்பட்டியல்கள் எங்களுக்கு கிடைப்பது அடுத்துவரும் ஆண்டில் சனவரி மாதத்தில் என்பதனால் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ஈடுபடுத்தப்பட்டது) அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கும் உள்ளபடியான பெறுமதிக்குமிடையே வித்தியாசத்தை முன்னைய ஆண்டிற்கான வருமானக் கணக்குகளில் (Accumulatated Income | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் முன்னைய ஆண்டின் பிழைகளையும் மதிப்பீட்டின் மாற்றங்களையும் நிதிக்கூறுக்களில் இனங்காணப்பட வேண்டியதுடன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் உரிய வெளிப்படுத்தல்களையும் செய்தல் வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| | | Grant) செம்மையாக்கல் செய்யப்படுகின்றது எனவும் அடுத்துவரும் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களில் இந்த கடந்த காலத்திற்குப் பொருத்தமான செம்மையாக்கல்களின் ஒப்பீட்டு ரீதியான தகவல்களை சரிசெய்வதற்கும் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 15 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் அதன் பாதீடு செய்யப்பட்ட பெறுமதிக்கும் உள்ளபடியான பெறுமதிக்கும் இடையே ஒரு ஒப்பீட்டினை அல்லது தனியான ஒரு நிதிக்கூற்றாக நடைமுறை காலப்பகுயில் சமர்ப்பிக்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்களில் பாதீட்டு நிரலாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபை அவ்வாறு சமர்ப்பித்திருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 15 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் பாதீட்டிற்கும் உள்ளபடியான மீதிக்குமிடையேயான ஒப்பீட்டினைச் சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சமர்ப்பிக்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்களில் பாதீட்டு நிரலாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் பிரகாரம் 80 (இ) ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடும் திகதியிலிருந்து 12 மாதங்களுக்குள் தீர்த்துவைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் நடைமுறைப் பொறுப்புக்களாக இனங்காணப்பட்ட வேண்டிய போதிலும் சபையினால் பணிக்கொடை ஒதுக்கீடுகளுக்குரிய ஒட்டுமொத்த பெறுமதியான ரூபா 43,766,240 தொகை நடைமுறைப் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 80(இ) ஆம் பந்தியின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீடுகள் நடைமுறைமற்றும் நடைமுறையற்ற பொறுப்புக்களாக பிரித்து காட்டுவதற்கு 2023 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடைமுறைப் பொறுப்பு மற்றும் நடைமுறையற்ற பொறுப்புக்களின் அளவு சரியாக இனங்காணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புக்களின் கீழ் இனங்காணப்பட்டிருந்தது. அதற்கிணங்க சபை பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகளை நடைமுறை மற்றும் நடைமுறையற்ற பொறுப்புக்களாக பிரித்து இனங்காணப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 50 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரே தன்மையான மற்றும் ஒரே பயன்பாட்டைக் கொண்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஒன்றுக்கொன்று மாற்றமான வகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டு காட்டப்படவேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 22,214,601 ஆன அலுவலக உபகரணங்களின் பெறுமதியினுள் உள்ளடக்கப்பட்ட கணனி துணைக்கருவிகளின் பெறுமதியை கணிப்பீடு செய்ய முடியாததுடன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இன் 17 ஆம் பந்தியின் பிரகாரம் கணனி மென்பொருளை கட்புலனாகாத சொத்துக்களாக காட்டுவதற்குப் பதிலாக ரூபா 284,400 பெறுமதியான அச் சொத்துக்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | உச்சநீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவ சபையின் நிலையான சொத்துக்களை வகைப்படுத்துவதற்காக தற்பொழுது கணக்கீட்டுக் கொள்கை காணப்படுவதுடன் அலுவலக தளபாடங்கள், பொருத்திகள், அலுவலக உபகரணங்கள் பொருத்திகள் ஆகிய சொத்து தொகுதிகளும் ஒரு சொத்து தொகுதியின் கீழ் 2023 ஆம் ஆண்டிலிருந்து இனங்காணப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை சரியாக வகைப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழான தொழிற்படு மூலதன மாற்றங்களில் மீளாய்வாண்டிற்கான வணிக பெறவேண்டியவைகளின் | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் பிரகாரம் நிதியற்ற கொடுக்கல் வாங்கல்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்ச் செயற்பாடுகளின் கீழ் இனங்காணப்பட்படாதிருப்பதற்கும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் | காசுப் பாய்சசல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் தொழிற்படு மூலதன மாற்றங்கள் சரியாகக் காட்டப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | வித்தியாசங்கள் ரூபா 4,312,326 தொகை காசு உட்பாய்ச்சலாக இருந்த போதிலும் அது ரூபா 3,173,346 ஆக இனங்காணப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 1,138,980 பெறுமதியால் செயற்பாட்டின் மூலம் உருவாகிய காசுப்பாய்ச்சல் குறைவடைந்திருந்தது. | கீழ் இனங்காணப்பட்டுள்ள குறைபாடுகளை முறையாக செம்மையாக்குவதற்கும் 2023 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான வருமானக் கூற்றில் பிற்போட்ட வருமானமாக ரூபா 132,560,770 இனங்காணப்பட்டிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் ரூபா 13,360,770 ஆக பற்றாக்குறை செம்மையாக்கியதன் காரணமாக ரூபா 119,200,000 ஆல் செயற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சல் அதிகரித்திருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் பிரகாரம் நிதியற்ற கொடுக்கல் வாங்கல்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கிழ் இனங்காணப்பட்டாமைக்கும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் இனங்காணப்பட்டுள்ள குறைபாடுகளை முறைப்படியாக செம்மையாக்குவதற்கும் 2023 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | செயற்பாட்டு நடவடிக்கைகளை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2010 ஆம் ஆண்டில் அன்பளிப்புச் செய்யப்பட்ட கட்டிடங்களின் வருடாந்த பெறுமானத் தேய்வு பெறுமதியான ரூபா 116,075,000 தொகையை 2021ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பு ஒதுக்கத்திலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக மீள்மிதிப்பு சொத்துக்களின் ஆரம்ப மீதி அப்பெறுமதியால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2010 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்புச் செய்யப்பட்ட கட்டிடங்களின் வருடாந்த பெறுமானத் தேய்வுப் பெறுமதியான ரூபா 116,075,000 செலவினை மீள்மதிப்பு ஒதுக்கத்திலிருந்து நீக்கி மீளாய்வாண்டிற்கான பிற்போட்ட வருமானமாக (Differed Revenue) இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னைய ஆண்டுகளின் போதும் அவ்வாறே மிள்மதிப்பு ஒதுக்கீட்டிலிருந்து அந்த ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வுப் பெறுமதி பிற்போட்ட வருமானத்திற்குச் செம்மையாக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டது. | மீள்மதிப்புச் செய்யப்பட்ட சொத்துக்களுக்குரிய வருடாந்த பெறுமானத் தேய்வு அளவானது மீளாய்வாண்டில் ஒரு செலவாக இனங்காணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கட்டிடங்களை புனரமைப்புச் செய்வதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 6,232,227 தொகை மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களின் அதிகரிப்பாக இனங்காணப்பட்டதன் காரணமாக சொத்துக்கள் அந்த பெறுமதியால் அதிக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமாக ரூபா 311,611 பெறுமானத் தேய்வாக இனங்காணப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 5,920,616 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உச்சநீதிமன்ற கட்டிடத் தொகுதிக்குரிய கட்டிடங்களின் திருத்தம் செய்தல் செலவுகளின் காரணமாக கட்எடிடங்களின் பெறுமதி அதிகரித்துள்ளது (Value Added) எனவே அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட திருத்தம் செய்தல் ஒரு சொத்தாக இனங்காணப்பட்டதானது திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மூலதனச் செலவு நிதியத்திலிருந்தாகும். அதற்கிணங்க அந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 6,232,227 தொகை ஆதனங்கள் கருவிகள், உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதுடன் அதற்காக 5 சதவீத வருடாந்த பெறுமானத் தேய்வு தொகை ரூபா 311,611 ஆகும். | வருமானச் செலவுகள் மீளாய்வாண்டின் ஒரு செலவாக வருமானக் கணக்கில் இனங்காணப்படுதல் வேண்டும். |
| (உ) | நிதி அமைச்சின் ஒரு டபிள் கெப் வாகனம் 2022 மார்ச் 14 ஆந் திகதியிலிருந்து உச்ச நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவ சபையின் மார்சல் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அது 2022 ஆகஸ்ட் 22 ஆந் திகதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ரூபா 9,000,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த மதிப்பீட்டுப் பெறுமதியானது வருமான செலவு கூற்றில் ஒரு வருமானமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீள்மதிப்பு ஒதுக்க நிதியக் கணக்கிற்கு செலவுவைத்ததன் காரணமாக மீள்மதிப்பு ஒதுக்க நிதியம் அப்பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | நீதி அமைச்சுடைய PH-0208 ஆம் இலக்க மோட்டார் வாகனம் நீதி அமைச்சின் மார்ஸல் அவர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்ததனால் அது 2022 மார்ச் 14 ஆந் திகதியிலிருந்து உச்ச நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவ சபையின் மார்ஸல் அலுவலகத்திற்கு உரிமை ஒப்படைக்கப்பட்டுள்ளது. அச்சொத்தின் கிரயம், கொள்வனவு செய்த காலப்பகுதி முதலிய தகவல்கள் உச்சநீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவ சபைக்கு சொந்தமில்லாததனால் மூலதன மானியமாக இனங்காண்பதும் அதன் கிரயத்தை நிலையான சொத்துக்ள் பதிவேட்டில் உள்ளடக்குவதும் சிக்கலானதுடன் அதன் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது என தெரியப்படுத்தப்பட்டது. | அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியை வருமான செலவு கூற்றில் இனங்காணப்தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டிற்காகரூபா 132,560,770 பெறுமானத் தேய்வு பிற்போட்ட வருமானமாக வருமான செலவு கணக்கிற்கு செலவுவைக்கப்பட்ட போதிலும் அதனை உரிய மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் திரண்ட மூலதன மானியத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 13,360,770 மாத்திரம் திரண்ட மூலதன மானியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் ரூபா 119,200,000 தொகை மீள்மதிப்பு ஒதுக்கத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக மீள்மதிப்பு ஒதுக்கம் ரூபா 119,200,000 ஆல் குறைத்தும் திரண்ட மூலதன மானியம்ரூபா 119,200,000 ஆல் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் ரூபா 132,560,770 பிற்போட்ட வருமானமாக இனங்காணப்பட்டு பின்வருமாறு செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டது என தெரிவிக்கிறேன். இதற்கு முன்னைய ஆண்டுகளின் போதும் பிற்போட்ட வருமானம் இவ்வாறே இனங்காணப்பட்டு கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.(2022/JE/095)<br><br>மூலதன ஒதுக்க நிதியம் (கட்டிடங்களும் மோட்டார் வாகனமும் வரவு — ரூபா 119,200,000<br><br>திரண்ட மூலதன மானிய கணக்கு வரவு — ரூபா 13,360,770<br><br>பிற்போட்ட வருமானம் செலவு — ரூபா 132,560,770 | வருடாந்தம் பெறுமானத் தேய்வு செய்தல் மூலதன மானியத்தின் கீழ் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட மொத்தமாக ரூபா 2,634,213 தொகையான கடன்பட்டோர் மீதியில் 30 நாட்களை மிகைத்துள்ள மீதி ரூபா 1,489,556 ஆகும். அது மொத்த கடன்பட்டோர் மீதியில் 57 சதவீதமாக இருந்ததுடன் இந்த மீதியில் உள்ளடக்கப்பட்ட 03 ஆண்டுகளை மிகைத்த ரூபா 215,799 கடன்பட்டோர் மீதியினை அறவீடு செய்வதற்கு | உடன்படிக்கை செய்துகொள்ளல் தாமதமடைந்ததன் காரணமாகவும் எங்கள் நிறுவனத்தில் பாதுகாப்பு சேவையை பெற்றுக்கொள்ளும் அரசாங்க நிறுவனங்களுக்கு திறைசேரியிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளல் தாமதமடைந்ததன் | கடன்பட்டோர் மீதியை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காரணமாகவும் கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்கு காலம் எடுத்துள்ளது என தெரிவிக்கிறேன். மேலும் ரூபா 215,799 மீதியினை உச்ச நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைத்துவ சபையின் முன்னாள் நிதி முகாமையாளரிடமிருந்து அறவீடு செய்வதற்கு காணப்பட்ட பணம் என்பதுடன் இது சம்பந்தமான வழக்கு நடவடிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் கோவை செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | சபையின் பாதுகாப்பு மற்றும் பொறியியல் பிரிவு ஊழியர்களுக்காக வெளித்தரப்பினர்களிடமிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கட்டிடத்திற்காக உரிய வாடகை உடன்படிக்கை 2022 ஆகஸ்ட் 04 திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையில் உள்ளடக்கும் போது கட்டிட உரிமையாளருக்கு வைப்புச் செய்யப்பட்ட 03 மாத வாடகை வைப்பு பணமாகிய ரூழூபா 1,350,000 பணம் அறிக்கைத் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உச்சநீதிமன்ற கட்டிடத் தொகுதியின் பாதுகாப்பு மற்றும் பொறியியல் பிரிவு ஊழியர்களுக்காக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்திற்காக எங்களால் அதன் உரிமையாளருக்கு வழங்கிய மீளச் செலுத்தும் 03 மாத வைப்பு பணத்தை செலுத்தாமையின் காரணமாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கட்டிட உரிமையானளருக்கு எதிராக அழைப்பாணை அனுப்பி21 நாட்கள் காலம் அப்பணத்தை செலுத்துவதற்கு கட்டிட உரிமையாளருக்கு வழங்கப்பட்டதுடன் இல்லையாயின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டது. | வைப்பு பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) 1982 இன் 43 ஆம் இலக்க முத்திரை வரி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2008சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். | ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 25 முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 222,200 கொடுப்பனவிற்காக முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை | இந்த 03 சந்தர்ப்பங்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டது முன்னைய கொடுப்பனவுகளாக இருந்ததுடன் அதன் போது முன்னைய கொடுப்பனவுகளை வேண்டிக்கொண்ட பிரிவினால் வவுச்சர்களில் கையொப்பமிட்டு காசேலைகளை பெற்றுக்கொண்டு உரிய வழங்குனருக்கு ஒப்படைக்கப்பட்டு பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுது அனைத்து ரூபா 25,000 இற்கு மேற்பட்ட வவுச்சர்களுக்காக ரூபா 25 முத்திரை மீது கையொப்பமிடுதல் அல்லது உரிய கட்டணத்தை அறவீடு செய்தல் இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நி.பி 104 (3)(4) | மீளாய்வாண்டில் இடம்பெற்ற GD 5068 மற்றும் CAE 2297 ஆம் இலக்க இரண்டு வாகன விபத்துக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எங்கள் நிறுவனத்தின் வாகனங்கள் சம்பந்தமாக இடம்பெற்ற விபத்துக்கள் தொடர்பான பரீட்சிப்பு நடவடிக்கைகளையும் உரிய அறிக்கையையும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதிக்கு இணங்க மேற்கொள்ளப்பட முடியாதுள்ளது. எனினும் அந்த வாகன விபத்துக்கள் சம்பந்தமான நடவடிக்கையானது நீதி அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்று தற்பொழுது முடிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க எதிர்காலத்தில் வாகன விபத்துக்கள் இடம்பெறுமாயின் நிதிப்பிரமாணத்திற்கு இணங்க நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் உரிய பரீட்சிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நி.பி 880 | பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைவைப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எங்கள் நிறுவனத்தில் இன்று வரை பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணைவைத்தல் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் எதிர்காலத்தில் ஆராய்ந்து பார்த்து இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,480,748 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 6,720,314 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 8,201,062 பின்னடைவு அவதானிக்கப்பட்டது. இதற்கு நியம தரமற்ற பொருட்களை விற்பனை செய்ததன் மூலம் பெற்ற வருமானம் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 2,121,230 தொகையால் குறைவடைதல் மற்றும் திருத்தம் செய்தல் மற்றும் பராமரித்தல் செலவு ரூபா 3,940,992 ஆலும் ஏனைய சேவைச் செலவுகள் ரூபா 3,554,390 ஆலும் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் அம்புலன்ஸ் வாகனம் 2021 மே 13 ஆந் திகதி இன்ஜின் செயற்படாமையால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலைக்கு மாறியிருந்ததுடன் 2023 செப்தெம்பர் 20 ஆந் திகதி வரையும் உரிய பழுதுபார்த்தலினை மேற்கொண்டு நிறுவனத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் திருத்தம் செய்வதற்காக ஒரு தனியார் நிறுவனத்தினால் 2022 சனவரி 10 ஆந் திகதி ரூபா 690,091 தொகைக்கு மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக | அம்புலன்ஸ் வாகனத்தை திருத்தம் செய்து 2022 நவம்பர் 02 ஆந் திகதி எங்கள் நிறுவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தும் பயன்படுத்திய போது Clutch முறைமையில் மீண்டும் ஏற்பட்ட கோளாறு நிலைமையின் அடிப்படையில் தற்பொழுது போக்குவரத்து அமைச்சின் கீழ் | வாகனத்தை திருத்தம் செய்து முடிவடைந்த உடன் நிறுவனத்திற்கு கொண்டு வருதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதி அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்தும் சபையினால் ரூபா 910,417 பெறுமதிக்கு திருத்தம் செய்தல் அந்த தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தும் அப்பெறுமதிக்கு அமைச்சு அங்கீகாரம் கிடைத்தது என்பதற்கான சான்றினைப் போல தனியார் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய விலை மனுக்களில் குறிப்பிட்ட ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தோற்றுவிக்கப்பட்டுள்ள ஒரு கம்பனிக்கு திருத்தம் செய்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டது. மேலும் ரூபா 220,326 விலை அதிகரிப்பு ஏற்பட்டதானது காலதாமதத்தின் அடிப்படையில் இல்லாது 2022 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட பொருளாதாரப் பிரச்சினையை முன்னிட்டு வாகன உதிரிப்பாகங்களின் விலை அதிக அளவில் உயர்வடைந்ததனால் என நாங்கள் நம்புகிறோம் என தெரிவிக்கப்பட்டது. | |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பெறுகை செயற்பாடுகளின் கட்டங்களையும் காட்டி பெறுகை கால அட்டவணை பெறுகை மேற்கொள்ளும் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மிளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 10,696,664 பெறுகைக்காக பெறுகைக் கால அட்டவணை தயாரிக்கப்படவில்லை. | தற்பொழுது ஒவ்வொரு பெறுகை நடவடிக்கைகளுக்காகவு ம் தனித்தனியாக பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட்டு அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை கால அட்டவணையினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.6 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட கேள்வி திறக்கும் படிவத்தில் Observation of each bid ஒவ்வொருபெறுகையின் போதும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை . | தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேலே வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் அடிப்படையில் அப்போது ஆரம்பித்து பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.6 இல் குறிப்பிட்ட கேள்வி திறக்கும் | கேள்வி திறக்கும் படிவத்தினை சரியாக பூரணப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | படிவத்தில் Observation of each bid பகுதி ஒவ்வொரு பெறுகையின் போதும் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | |
| (இ) | 2022 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,398,565 பெறுமதியான 03 பொருட்கள் 2022 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கு மத்தியில் உரிய கணனி 2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் Linen items மற்றும் staffuniform உள்ளடக்கப்படாததானது ஒரு மூலதனச் செலவு இல்லாததனால் என தெரிவிக்கப்பட்டது. | அனைத்து பெறுகைகளும் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.3 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைக் குழுவினால் உரிய பெறுகைக்காக கேள்வி திறக்கும் குழு நியமிக்கப்பட வேண்டிய போதிலும் வாயு சீராக்கியினைப் பொருத்துதல் (04 மற்றும் 05 ஆம் மாடி) இற்கான பெறுகைக் கோவையில் உரிய கேள்வி திறக்கும் குழுவினை நியமித்தல் அல்லது கேள்வி திறப்பதற்குரிய எந்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கேள்வி மதிப்பீட்டு அறிக்கை கோவைக்குள் உள்டளடக்கப்படுதல் வேண்டும். |

**3.3 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் அங்கீகரித்த பதவியணியனர் 180 ஆக இருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் தகிதி வரை 08 பதவிகளில் 40 ஊழியர் பற்றாக்குறை காணப்பட்டது.அதற்கிணங்க சபையின் பதவியணியை நிகழ்கால நிலைமைக்கு இணங்க தயாரிப்பதற்கு அல்லது அங்கீகரித்த பதவிகளை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எங்கள் நிறுவனத்தின் அங்கீகரித்த பதயிணயினினர் 180 ஆக இருந்ததுடன் தற்பொழுது 40 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டு முழுவதும் வெற்றிடமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான தொடக்க நடவடிக்கைகள் எங்கள் நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அதற்காக உரிய அங்கீகாரம் வரிசை அமைச்சிடமிருந்தும் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திடமிருந்தும் கிடைத்திருக்கவில்லை. தற்பொழுது வெற்றிடமான பதவிகளில் பராமரிப்பு உத்தியோகத்தர் (மின்சாரம்) பராமரிப்பு உத்தியோகத்தர் (வாயுசீராக்கி, நீர் வழங்கல் மற்றும் செயற்பாடு) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதற்கிணங்க கிடைத்துள்ள விண்ணப்பங்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கை இடம்பெறுகின்றது என தெரிவிக்கப்பட்டது. | வெற்றிடமான பதவிகளை பூரணப்படுத்துவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் (பொது முயற்சிகள் தொடர்பான வழிகாட்டிக் கோவை) பந்தி இலக்கம் 2.3 இலுள்ள பட்டோலை I இன் 02 ஆவது பந்தியின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் குறிக்கோளை அடைந்துகொள்வதற்காக பூரணப்படுத்த வேண்டிய தந்திரோபாயங்கள், நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் அச்செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொறுப்பிற்கு கட்டுபட்டுள்ள நபர்களும் எதிர்பார்த்த நிதி மதிப்பீட்டிற்கான காலப்பகுதியுடன் உரிய உத்தியோகத்தர்கள் உறுதியாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2021 நவம்ர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் உபபட்டோலை I இன் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டமானது நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் வரிசை அமைச்சிடமிருந்து எங்களின் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு 2021 திசெம்பர் 20 ஆந் திகதியே தெரியப்படுத்தப்பட்டது. அந் நிதி ஏற்பாட்டின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டம் 2022 சனவரி 03 ஆந் திகதி செயலாளருக்கு நிர்ணயிக்கப்பட்ட நடடவடிக்கைகள் மற்றும் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பிற்கு கட்டுப்பட்டுள்ள நபர்கள் மற்றும் எதிர்பார்த்த நிதி ஏற்பாட்டிற்கான காலப்பகுதியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 22,055,000 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான வருமானம் ரூபா 16,948,589 ஆக இருந்ததனால் ரூபா 5,106,411 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. பாதீடு செய்யப்பட்ட வருமானத்தினை விட உள்ளபடியான வருமானம் 23 சதவீத்தால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் எதிர்பார்த்த இலக்கினை அடைந்து கொள்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | உச்ச நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவ சபையினால் பாதுகாப்பு சேவைகளை வழங்குகின்ற இலங்கை சட்டதரணிகளை பயிற்றுவிக்கும் நிறுவனம் மற்றும் சட்ட வரைஞர் நிறுவனதத்தினால் எதிர்பார்க்கப்பட்டவாறு பாதுகாப்புச் சேவைக் கட்டணங்களைச் செலுத்துதல் தாமதமடைந்தமை காரணமாக இருந்ததுடன் 211 நிரந்த மூன்று நபர் உச்ச நீதிமன்றங்களிலிருந்தும் கிடைக்க வேண்டிய வாடகைப் பணம் நிதி ஏற்பாடு இல்லாமையின் காரணமாக கிடைப்பது தாமதமடைந்ததனால் எதிர்பார்த்த வருமானத்தை அடைந்துகொள்ள முயடிாதுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. | பாதீடு செய்யப்பட்ட வருமானத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மீண்டுவரும் செலவுகளுக்கு மத்தியில் 06 செலவு வகைகளுக்காக பாதீடு செய்யப்பட்ட செலவு ரூபா 115,878,000 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான செலவு ரூபா 129,722,866 ஆக இருந்ததனால் பாதீடு செய்யப்பட்ட செலவினை மிகைத்து ரூபா 13,844,866 செலவு செய்யப்பட்டிருந்தது. | பொதுத்துறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டில் அந்த ஆண்டிற்காக பணமாக செலுத்திய செலவுகள் மாத்திரம் பதியப்பட்டது. கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிட்டவாறு பாதீடு செய்யப்பட்ட செலவினை விட உள்ளபடியான செலவு அதில் காணப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. | பாதீட்டு நிதி எற்பாட்டினை மிகைக்காதிருக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் (பொது முயற்சிகள் தொடர்பான வழிகாட்டிக் கோவை) பந்தி இலக்கம் 2.3 இன் பட்டோலை I இன் 3 ஆம் பந்தியின் பிரகாரம் பாதீட்டில் உள்ளடக்கியிருக்க வேண்டிய முன் அறியப்பட்ட வருமான கூற்று,முன்அறியப்பட்ட நிதிநிலைமை கூற்று மற்றும் முன்னறியப்பட்ட காசுப்பாய்ச்சல் சுற்று உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து சுற்றறிக்கைக்கு இணங்க மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பதற்கும் என தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |